செய்தி வெளியீடு எண்: 144 நாள் : 01.03.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (1.3.2016) தலைமைச் செயலகத்தில், மதுரை தல்லாகுளம் பகுதியில் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பெருந்திட்ட வளாகம், சென்னை தரமணியில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 3 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடம், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் 64 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் முழு உருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் புதுப்பொலிவோடும் சிறப்போடும் செயற்பட மதுரை தல்லாகுளம் பகுதியில் 14.15 ஏக்கர் நிலப்பரப்பில், 87,300 சதுர அடி கட்டட பரப்பளவில் இரண்டு தளங்களுடன் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 400 பேர் அமரக்கூடிய கலையரங்கம், நிருவாகப் பிரிவு, ஆய்வுப் பிரிவு, நூலகம், வகுப்பறைகள், விருந்தினர் தங்கும் அறைகள், சுற்றுச்சுவரில் திருக்குறள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் ஆகியவற்றுடன் கட்டப்பட்டுள்ள மதுரை உலகத் தமிழ்ச் சங்க பெருந்திட்ட வளாகம்;

சென்னை, தரமணியில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 3 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பழந்தமிழர்களின் சிறப்புகளையெல்லாம் நாட்டுக்கு எடுத்துக் காட்டும் வகையில், சுடுமண் சிற்பம், சுதைச் சிற்பம் மற்றும் மரம், கல், உலோகம் ஆகியவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடம்;

நெல்லை சீமையில் வெள்ளையரை எதிர்த்து போரிட்ட பூலித்தேவனின் முதன்மை படைத் தலைவராக இருந்து நெற்கட்டும் செவல் பாளையத்திலும் மற்றும் வெள்ளையருக்கு எதிரான பல போர்களிலும் வீரப்போர் புரிந்தவரும் பூலித்தேவன் மறைவுக்குப் பிறகும் விடுதலைப் போரை தொடர்ந்து நடத்தி உயிர்த் தியாகம் செய்தவருமான விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் நினைவைப் போற்றும் வகையில் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் 64 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் முழு உருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம்;

என மொத்தம் 29 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மதுரை உலகத் தமிழ்ச் சங்க பெருந்திட்ட வளாகம், பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடம் மற்றும் விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் மணிமண்டபம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. முக்கூர் என். சுப்பிரமணியன், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.கே.சி. வீரமணி, தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் தலைவர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன், தகவல் தொழில்நுட்பவியல் துறை முதன்மைச் செயலாளர் திரு. தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு. த. உதயச்சந்திரன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 1.3.2016